வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசு] யாழ்ப்பாணம்:- ஆனந்த ஞு ஐப்பசிமீ க-உ வெள்ளிக்கிழமை (18-10-1974) [இல: உசு

# தமிழ்ப் பண்பாட்டு பெருவிழா

## தமிழ்ப் பெருமக்களுக்கு ஓர் அன்பு அழைப்பு

உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்களது பிரதிநிதிகள் ஒன்றுசேரும் வாய்ப்பை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் ஏற்படுத்திக்கொடுக்கத் திட்டமிட்டுள்ளது. தில்லிப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாநிதி சாலை இளந்திரையன் அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதுபற்றி டாக்டர் சாலை. இளந்திரையன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

யாழ்ப்பாணத்தில் நாலாவது உலகத் தமிழ் மாநாடு நடந்தபோது, அங்கேயே உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் 8-1-74 இல் உருவாசகப்பட்டதை அறிவீர்கள். உலகின் பல பாகங்களில் சிதறிக் கிடக்கும் தமிழர்கள் தங்கள் மொழியையும் பண்பாட்டையும் மறவாமல் காத்துவருவதற்கு ஓர் உந்துதலாக, ஆண்டுதோறும் (அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை) தமிழ்ப் பண்பாட்டுப் பெருவிழா ஒன்றை இந்தியத் தமிழகத்திலே நடத்தலாமென்று உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் சிந்தித்து வருகிறது.

வெளி நாடுகளில் வாழும் தமிழ்க் குடும்பங்களில் உள்ள சில இளைஞர்களும் இளம் பெண்களும் தேர்தெடுக்கப்பட்டு அவர்கள் இந்த விழாவுக்கு அழைக்கப்படுவார்கள். அவர்கள் தமிழகத்தில் தங்கியிருக்கும் சுமார் ஒரு மாதகாலத்தில் தமிழ்மொழி, தமிழ்க் கலை, தமிழ் வரலாறு ஆகியவற்றின் சிறப்பு அம்சங்களை விளக்கும் வகுப்பு, சொற்பொழிவு, கருத்தரங்கு முதலியவைகளில் பங்குகொள்வார்கள். மாலை நேரங்களில் தமிழ்ப் பண்பாட்டை விளக்கும் நாடகம், நடனம், வாய்ப் பாட்டு, கருவி இசை, கரகம், வில்லிசை, விளையாட்டுக்கள் முதலியவைகளைக் கண்டும், கேட்டும் மகிழ்வார்கள். வாரம் ஒருமுறை

வளர்ச்சி 3-ம் பக்கம்

## சைவ மகளிர் மன்றம் கலை நிழ்ச்சிகள்

சைவ மகளிர் மன்ற ஆதரவில், வண்ணை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நவராத்திரி விழா நடைபெற்றுவருகின்றது. பிற்பகல் 4-30 மணி முதல் 6-30 மணிவரை மகளிர் மன்ற மாணவிகள் அளிக்கும் கலை நிகழ்ச்சிகளும், 6-40 மணிமுதல் 6-45வரை பூசையும், 6-45 மணிமுதல் 7-30 வரை இளைப்பாறிய வேம்படி மகளிர்கல்லூரி அதிபர் செல்வி மேபில் தம்பையா அவர்களால் யப்பான் நாட்டின் முன்னேற்றத்தில் மாதரின் பங்கு என்னும் சொற்பொழிவும், யப்பான் நாட்டின் முன்னேற்றத்தை விளக்கும் படங்களும் காட்டப்படும். பெற்றோர்கள் பிள்ளைகள், மற்றும் அன்பர்களையும் சமூகம் கொடுக்குமாறு மிக அன்புடன் சைவ மகளிர் வேண்டுகிறார்கள்.

கோக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில்

மேற்படி விழா 16-10-74 முதல் 25-10-74 வரை தினமும் 8-15 மணி தொடக்கம் விசேட பூசை ஆராதனைகளுடனும், சமய நிகழ்ச்சிகளுடனும் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

சைவப் புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் விழாவை ஆரம்பித்து வைத்தார்கள்.

தமிழ்மணி எஸ். கணேசசுந்தரம், ஆசிரியை திருமதி சி. கதிரவேலு, திரு. எம். எஸ். ஸ்ரீ தயாளன், அன்புக்கடல் வ. வி. ஆறுமுகம், ஆசிரியர் க. பழனிவேற்பிள்ளை, சைவப் புலவர் க. சிற்றம்பலம், சைவப்புலவர் மூ. திருஞானசம்பந்தர், முத்தமிழ் வித்தகர் தா. பொன்னம்பலம், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் விரிவுரைகளும் இடம்பெறும்.

## விஜய தசமியில் வித்தியார்த்திகளுக்கு ஒரு வேண்டுகோள்

அன்புள்ள மாணவ மாணவிகளே! வருங்கால மாணிக்கங்களே!

[ பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ]

கலைமகள் கடாக்ஷமும் திருமகள் கடாக்ஷமும் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒருங்கு அமைவதாக. இவ் வருடம் விஜய தசமி விழா மரம் நாட்டு விழாவாக மலரட்டும்-

(மகா முனிவர்கள் மர நிழலிலும் கொடிப்பந்தர்க் கீழும் இருந்துகொண்டுதான் ஞான சாத்திரங்களை எழுதினார்கள். உபதேசித்தார்கள்).

பிள்ளைகளே, பயன் தரும் மரங்கள், கொடிகளை விஜய தசமித் தினத்தில் உங்கள் பெயரால் நாட்டுங்கள்.

இன்று மரங்களின் நாயகமாய்க் கற்பகதருவாய்ப் பயன செய்கின்றது பனை. பஞ்சத்தைப் பறக்கடிக்கின்றது பனை.

அருமை மக்களே! ஒவ்வொருவரும் நல்லொரு பனம் விதையேனும், நிலத்தில் புதைத்து, அது முளை கொண்டு வளர வழி செய்யுங்கள். வருங் கால உலகம் உங்களை வாழ்த்திக்கொண்டேயிருக்கும். பனை வளம் பெருகுவதாக.

உ

சிவமயம்

## சைவ பரிபாலன சபை

யாழ்ப்பாணம்

## 86- ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

சைவ பரிபாலன சபையினது பொதுக்கூட்டம் ஆனந்த வருடம் ஐப்பசி மாதம் 10-ஆம் தேதி (27-10-74) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

### நிகழ்ச்சிகள்

திருநீறு அணிந்து கொள்ளல்
தேவாரம்

1. சென்ற வருடாந்தக் கூட்ட வரலாறு
2. சைவபரிபாலன சபையினது செயற்குழுவினரின் வருடாந்த அறிக்கை
3. 1973 — 74-ம் ஆண்டு வரவு செலவுக் கணக்குகள்
   (அ) சைவ பரிபாலன சபை
   (ஆ) சைவப் பிரகாச அச்சியந்திரசாலை
4. தலைவர் நிறைவுரை
5. C பிரிவு நிருவாகசபை அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல்
6. புது வருட உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தல்
7. பிரேரணைகள்
8. வேறு விடயங்கள்
9. காரியதரிசி. நன்றியுரை

தேவாரம்.

சைவ பரிபாலன சபை, வை. இரகுநாதமுதலியார்
யாழ்ப்பாணம், 10-10-74. கௌரவ காரியதரிசி.

முக்கிய கவனிப்பு

1. வருடாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 24-10-74-க்கு முன்னர் காரியதரிசிக்கு அனுப்பப் பெறுதல் வேண்டும்.
2. கணக்கு சம்பந்தமான வினாக்கள் 24-10-74-க்கு முன்னர் தனாதிகாரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.
3. சந்தாப் பணத்தை 21-10-74-க்கு முன் பாக்கி இன்றிச் செலுத்தியவர்களே வாக்குரிமை உடையவர்களாவார்கள்.

வெள்ளி விழா கண்ட, சொக்கனுக்கு

## யாழ்ப்பாணத்தில் பெரு விழா

ஈழத்தின் பிரபல எழுத்தாளர் சொக்கன் [க. சொக்கலிங்கம்] அவர்களது எழுத்துப் பணியின் வெள்ளி விழாவும இலக்கியக் கலை விழாவும் நாளை 19-10-74 அன்று நல்லூர் சாதனா பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

காலை 8 மணி முதல் நண்பகல 12-40 மணிவரை புத்தகக் கண் காட்சி, இலக்கிய அரங்கு, கவியரங்கு கவியரங்கு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பிற்பகல் 3 மணி முதல் 6-45 மணி வரை பாராட்டரங்கும் 6-45 மணி முதல் 7-45 மணி மணி வரை நூல் வெளியீடு அரங்கும் அதன் பின்னர் கலை யரங்கும் இடம்பெறும்.

இந் நிகழ்ச்சிகளுக்கு முன்னாள் மலேசியப் பேரவை உறுப்பினர் திரு. இ. நாகரத்தினம் திருவாளர்கள் ச. அம்பிகைபாகன்;

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## சிந்தனைச் செல்வன், சொக்கன்

"இறை—ஒளி"

எழுத்துப் பணியில் எழுந்தசீர் நின்று
பழுத்துவெள்ளிப் பண்பார் விழாவாய் — வழுத்திட்ச்
செந்தமிழ்ச் சொக்கன் திறன்பார் அறியும்நற்
சிந்தனைச் செல்வன் அவன்,

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி வயோதிபர் இல்லத்தில் சபையின் சமயப் பணி

## சைவப் பெரியார் பண்டிதர் சங்கரப்பிள்ளை அவர்கள் தரும் விளக்கம்

கைதடி வயோதிபர் இல்லத்தில் சைவசமய வழிபாடு சம்பந்தமான விடயங்களை நிகழ்த்தும் வண்ணம் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் 20.12-70 முதல் நியமனம் பெற்றேன். அன்றுமுதல் இன்றுவரை வெள்ளிக்கிழமை தோறும் காலை 9 மணிமுதல் 10-30 மணி வரை இப்பணி பெருமான் திருவருளால் நடைபெற்று வருகிறது.

மேற்படி வயோதிபர் இல்ல ஆராதனை மண்டபத்தில் தெய்வப் படங்கள் பல வைக்கப்பட்டிருக்கின்றன அங்குள்ளவர்கள் அம்மண்டபத்தினை மாவிலை தோரணம் மலர்மாலை முதலியவற்றால் அலங்கரித்திருப்பார்கள். அம்மண்டபத்தில் ஊதுவர்த்தி கொழுத்தி நறுமணம்பரப்பி கர்ப்பூர ஆராதனைசெய்து யாவரும் விபூதிப் பிரசாதம் அணிந்தபின் கூட்டுப்பிரார்த்தனை நடாத்தப்பெறும். கர்ப்பூர ஆராதனை நிகழ்த்தும்போது "ஒளிவளர் விளக்கே' என்ற முதலையுடைய திருவிசைப்பா ஓதப்படும். கூட்டுப் பிரார்த்தனையில் இதுவரை சிவபுராணமே ஓதப்பெற்றது. வருகிற கிழமைதொடக்கம் பண்டிதமணியின் விருப்பப்படி திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய " திருவெழுகூற்றிருக்கை " பாராயணஞ் செய்யப்பெறும்.

1—1—73 தொடக்கம் 31—12—74 வரை
நிகழ்ச்சிகள் விபரம்

1-1-73 முதல் 31-1-73 வரை திருவாசகத்தில் திருச்சதகப் பகுதி

1-4-73 முதல் 31-10-73வரை நீத்தல் விண்ணப்பம், கோவில் மூத்த திருப்பதிகம், கோயில் பதிகம்.

1-11-73 முதல் 31-1-74 வரை திருவெம்பாவை - திருப்பள்ளி யெழுச்சி இவை இரண்டும் பூபாள இராகத்திலும், ஏனைய திருவாசகப் பாடல்கள் மோகன இராகத்திலும் பாடி இசையார்ந்த மெய்ப்பாடு தோன்ற விரிவுரை.

1-2-74 முதல் 31-3-74 வரை "வாளால் மகவரிதூட்ட வல்லேன்" என்னும் பட்டினத்தடிகளால் விதக்கப்பட்ட மும்மணிகள் பற்றிய இசையார்ந்த விரிவுரை.

1-4-74 முதல் 30-6-74 வரை "நீ நாளும நன்னெஞ்சே நினை கண்டாய்" போன்ற திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய 12பண்களை அதற்குரிய இராகத்தோடு பண்ணூரப்பாடி விளக்கல்.

1,7-74 முதல் 31-8-74 வரை இளையான்குடிமாற நாயனுர் சரித்திரத்தோடு, மகேசுவர பூசையின் மகத்துவம்; மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் முதலிய விஷயங்களைத் தொடர்பு படுத்திப் பாடல்களை இராகத்தோடுபாடி இசையொன்றிய கதாப்பிரசங்கம்.

1-9-74 முதல் 31-12-74வரை திருவெழுகூற்றிருக்கை கந்தரனுபூதி இசையார்ந்த இன்னுரை.

இந் நிகழ்ச்சியை அறிந்து மகிழ்ந்த பண்டிமணி திரு. சி கணபதிப்பிள்ளை அவர்கள் இவ்வழிபாட்டு நிகழ்ச்சியைப் பாராட்டி மில்க்வைற் சவர்க்கார தொழிலக அதிபர் சிவதர்மபூபதி க. கனகராசா ஜே. பி. அவர்களின் இலவச வெளியீடான திருவெழுகூற்றிருக்கை, கந்தரனுபூதி என்னும் இரு நூல்களையும தந்து இவைகளைப் பாராயணஞ் செய்யச் செய்வது நன்றெனச் சொல்லியதுமன்றி அவற்றின் மகத்துவத்தையும் பின்வருமாறு கூறினர்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார், அபரசுப்பிரமணியார், பிள்ளையார் செயல்களைப் பரசுப்பிரமணியர் மேலேற்றிப் பாடியருளினர் கந்தரனுபூதிமானுகிய அருகிரிநாதர்

பிள்ளையார் அருளிய தேவாரத் திருமுறைகள் முழுவதையும் ஓதுவதற்குச் சமம்; பிள்ளையார் அருளிய 'ஒருருவாயினை' என்று தொடங்கும திருவெழுகூற்றிருக்கைத் தேவாரத்தை ஓதுவது. திருவெரு கூற்றிருக்கையையும், கந்தரனுபூதியையும நித்தியபாராயணஞ் செய்வது, இம்மை, மறுமை, வீடு மூன்றும் பயப்பதாகும்.

பண்டிதர் திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்கள் மேற்குறிப்பிட்ட இரண்டினையும் கைதடி வயோதிபர் இல்லத்தாரைப் பாராயணஞ்செய்யவைத்து வேண்டிய விளக்கங் கொடுப்பது பெரிதும் பாராட்டற்பாலதாம். திருவருள் கூட்டுவதாக.

இப்பணியை ஆற்றுவதற்கு வாய்ப்பளித்த யாழ. சைவபரிபாலன சபையாருக்கும், சமயப் பிரசார அமைச்சருக்கும் ஷெ நிகழ்ச்சிகளுக்கு மனமுவந்து உதவி நல்கும் வயோதிப இல்ல அதிபர், வைத்திய அதிகாரி மற்றும் உத்தியோகஸ்தர், தொழிலாளர்கள், பாராயண நூல்களை இலவசமாக வழங்கும் மிலக்வைற் சவர்க்காரத் தொழிலக அதிபர் ஆகியோர்களுக்கும் மனமார்ந்த நன்றியறிதலை வெளிப்படுத்தாதிருக்க முடியாது. பண்டித மணியவர்களையும், காரிய தரிசியும் மறக்கவே முடியாது.

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

## குருபூசை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாதரவில் 13-10-74 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் அருணந்தி சிவாசாரியர் குருபூசை கொண்டாடப்பெற்றது. விசேட பூசை நிகழ்ந்தபின் அருணந்தி சிவாசாரியர் புராணம் படித்துப் பயன்சொல்லப்பெற்றது.

——

# ஆவணி மூலத்தின் பெருமை

தமக்கென்று ஓர் ஊர் ஒரு பேர், ஒரு குணம், ஒரு வடிவம் இலலாத பெருமான் ஆன்மாக்களாகிய நாமுய்தற் பொருட்டு ஊரும் பேரும் குணமும் குறியும் வடிவமும் கொண்டு எம்மை ஆட்கொள்வர். அவ்வடிவம் பலவகைத்தானது. அதனைக் கந்த புராணத்தில்

"ஒன்ருயிரு திறமாய்
என்றந்தாய் எப்பிலவா
யன்ருதியின் மீட்டுமைந்தாய்
எப்பிலதாய் தீங்ககற்றி
நின்ருவிகட்கு நலம்புரிதற்கே
யன்ரே

என்பதாலுணரப்படும். ஆகவே பெருமான் அடியார் பொருட்டு அறுபத்துநான்கு திருவிளையாடல் செய்தருளினர். அவற்றின் ஒன்று நரி பரியாக்கிய விளையாட்டு. விளையாட்டென்ருல் பிள்ளைகள் மண்சோறு காச்சுதல் போல் பயனற்றதாய் முடியும். ஆகவே பயன்கருதியே திருவிளையாடலென்றர். மேலே காட்டிய திருவிளையாட்டு ஆவணி மூலத்தன்று நிகழ்ந்தது.

மாதங்களுள் சிறந்து விளங்குவது ஆவணி. இதன் பெருமையை முருகப்பெருமான் திருச்செந்தூர்ப் புராணத்தில் விபூதி அத்தியாத்தில் "நிலவிய மாதங்கடம்மில் நிறைதரு சிராவணி நான்" என்று கூறியுள்ளார். அடுத்ததாக மூல நட்சத்திரம் எல்லாவற்றிலும் பெருமையுடையது என்றும், இதில் பிறந்தவர்களுக்கு நீண்ட ஆயுள், நீண்ட செல்வம், தெய்வானுக்கிரகம் எல்லாமடைவரென்றும் சோதிடர் கூறுவர். ஆகவே மேற்சொன்ன பெருமையுடைய ஆவணியும், தலைசிறந்த நட்சத்திரமாகிய மூலமும் பொருந்திய நாள் அந்நாள் ஆதலின், திருவாதவூரடிகள் புராணத்திலும் "அங்கிளர் மதுரையம்பதியிலாவணித் திங்களின் மூலநாள் செறிதனதினி லெங்கணும் நீறு மஞ்செழுத்து மோங்கிடச் சங்கரனிடும் பரிச்முகம் வந்ததால்"

அத் தினம் இறைவன் திருவருள் செறிந்த தினம், அத்திருவிளையாட்டு நடந்த தலம். எத்தலத்திற்கும் முதன்மையுடைய, துவாதசாந்தத் தலமாகிய மதுரை. அதன் பெருமையை பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணத் தலவிசேட படலத்தில் "சுரநதிசூழ்காகி முதற்பதி மறுமைக்கதியளிக்கும், தானீர் வைகை, வரநதிசூழ் திருவாலவாய் சிவன்முத்தி தரும் வதிவோர்க்கு, ஈதுநிரனதிகம், பரகதியும் பின்கொடுக்கும் ஆதலினிச் சிவன்முத்தி, புரனதிகம் என்பதெவன் அதற்கதுவே ஒப்பாம் எப்புவனத்துள்ளும்" என்னும் செய்யுளாலும் இன்னும் எத்தனையோ செய்யுளாலும் காணப்படும். திருநாவுக்கரசு சுவாமிகளும் இந்தத் தலத்தில் பாடிய தேவாரத்தில் "முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என்று தொடங்கி திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்க பெற்றேனே"என்று முடித்துள்ளார், ஆகவே இந்தப் பெரிய தலத்தில் சிறந்த மாதமாகிய ஆவணி மாதமும், தலைசிறந்த மூல நட்சத்திரமும் கூடிய நாளே பெருமான் பரிமேலழகராய் எழுந்தருளிக் காட்சி கொடுத்து எமது சைவசமய குரவராகிய மாணிக்கவாசக சுவாமிகளுக்கும் அரிமர்த்தன பாண்டியனுக்கும் மற்றும் ஆன்மா கோடிகட்கும அருள்பாலித்த தினமாகும். எங்கும் கிடைக்காத பெருமையுள்ள தினமாதலால் ஆவணி மூலம் சைவ சமயத்தவராகிய எமக்கொரு சிறந்த திருவருள் பெற்ற நாளாகும் அந்நாளில் நாமும பெருமானை வழிபட்டு எம்முடைய துன்பங்களையும் நீக்கி கடைத்தேறுவோமாக.

——

## நவராத்திரி விழா

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலில் 4-ம் நாள் நவராத்திரி விழா 19-10-74சனிக்கிழமை மாலை 6 மணி முதல் சிறப்பாக நடைபெறும். விசேட அபிஷேகாராதனையை யடுத்து இசைவாணி பாக்கியராசா அவர்களது பக்திப் பஜனையும் இடம்பெறும், இரவு 9 மணி கொலு மண்டப பூசை சதுர்த்தி உற்சவம் ஆதியன இடம்பெறும்.

———

## சங்குவேலி தெற்கு ஞானவைரவர் கோயில்

சங்குவேலி தெற்கு ஞான வைரவர் கோயிலைப் பொதுவாக நிருவகிப்பதெனத் தீர்மானஞ் செய்யப்பெற்றது. 25-9-74 ல் அன்று திரு. சி. சிவசம்பு அவர்களின் இல்லத்தில் சைவமக்கள் கூடி கோயில் நிருவாகத்தைப் பற்றிநிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி நிதி சேர்த்து ஷெ கோயில் அமர்ந்திருக்கும நிலத்தை சொந்தக்காரர் திரு. வே. செல்லத்துரையிடமிருந்து விலைக்குப் பெற்றுப் பொதுமக்கள் நிருவாகத்தில்சேர்க்கவும் ஒழுங்கு செய்யப்பட்டது.

எதிர் வரும் வைகாசி வருடாந்தப் பொங்கலுக்கு முன் நிச்சயிக்கப்பட்ட பணத்தை உதவி கோயில் நிலம் பொதுமக்கள் நிருவாகத்தில் சேரும. அதுவரை கோயிலில் நிகழும் நவராத்திரி திருவெம்பாவை முதலிய உற்சவங்கள் வழமைபோல நிகழும். முன்னர்க் கூறப்பட்ட கூட்டத்திற்கு திருவாளர்கள் சி. சிவசம்பு, வே. செல்வத்துரை, த செல்லத்தம்பி சு, பொன்னையா, அ. பொன்னையா, க. சபாரத்திநம் கா. கந்தசுவாமி இ. நல்லதம்பி முதலியவர்கள் சமுகமளித்தார்கள்.

——

# மூவடிவாகி மிளிரும் அம்பிகை

[ ஷண்முக. குமரேசன் ]

பல்லவி

அம்பிகையே வரம் எமக்கருள்வாயே
அகமலர்ந் தெம்முளத்தில் அன்புடன் அமர்வாயே
(அம்பிகை)

அநுபல்லவி

நம்பினோர்க் கிரங்கி நலனெலாம் தருவாயே
வெம்பியே வாடுவோரின் வெந்துயர் தீர்ப்பாயே
(அம்பிகை)

சரணம்

நெஞ்சினில் வீரம் நிலைபெற அருள்வாய்
துர்க்கையென உன்னைத் தொழுதிட் மகிழ்ந்தே;
திரவியம் வேண்டித் திருமகளே என்று
சிந்தனை செய்தால் நற்பொருள் தருவாய்
(அம்பிகை)

தூயதோர் வெள்ளை உள்ளமே உருகித்
தோத்திரம் பாடக் கலைநயம் அளிப்பாய்
வீணையும் ஏந்தி வாணியாய்த் திகழ்வாய்
மூவடி வாகியே மிளிர்ந்திடும் அன்னையே.
(அம்பிகை)

வீட்டுக்கு இலட்சுமி பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் மு. வ.

"மு. வ." தமிழ் உலகில் தனித்துவம்பெற்ற இரு எழுத்துக்கள். நாவல், சிறு கதை, நாடகம், திறனாய்வு, ஆராய்ச்சி ஆகிய துறைகளில் இறைபோக அருவிய எழுத்துக்கள் இவை. தமிழ் விரிவுரையாளனுகப் பணி புரியத் தொடங்கி தமிழ்ப் பேராசானுக வளர்ந்து ஈற்றில் பல்கலைக் கழக துணைவேந்தராகப் பணியாற்றிய பெருந்தகை டாக்டர் மு வரதராசன் அவர்கள். நண்பர்களால் மட்டுமல்ல. சகலராலும் அன்பாகவும் செல்லமாகவும் 'மு. வ" என அழைக்கப்பட்டார்.

எண்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதிக் குவித்த மாமலை டாக்டர் மு, வரதராசன். அவை பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவன் முதல் சாதாரண அடிப்பங்கரைப் பெண் வரைக்கும் படித்துப்பயன் பெற உதவின.

"கள்ளோ காவியமோ" என்ற அவரது நாவலைப் பல தடவை படித்து அநுபவித்தவர் பலர். நவீன இலக்கியத்துறையில் துணிச்சலுடன் முதலிற் காலடி எடுத்து வைத்த தமிழ்ப் பேராசான் டாக்டர் மு. வ, எனில் தவருகாது.

இவரது நாவல்களில் பெர்னுட் ஷாவின் கருத்துச்சாயல்கள் தெறித்து விழும், ஷா பற்றித் தனியாகவும் நூல் எழுதியுள்ளார். இவரது திறனாய்வு நூல்கள் மேல்நாட்டு இலக்கியங்களைத் தரிசிப்பதற்குப் பல்கணியாகவும் உதவுகின்றன, இவரது "இலக்கியத் திறன்" என்னும் நூல் இதற்கு ஓர் நல்ல எடுத்துக் காட்டு.

அல்லி, கரித் துண்டு போன்ற இவரது நாவல்கள் விமர்சன அரங்கில் நன்கு அலசப்பட்டவை. டாக்டர் மு. வ நாவலாசிரியரா என்ற வாதப் பிரதி வாதம் ஒரு பொழுது இலக்கிய உலகில் தலை தூக்கியது, ஈழத்துத் தமிழத் தினசரிஒன்று இவ் வாதப் பிரதி வாதங்களுக்கு அன்று களம் அமைத்துக் கொடுத்தது.

இலக்கியத்துடன் மட்டுமல்ல அரசியலிலும் இவர் நூல்கள் பல யாத்துள்ளார். அரசியற் பண்பாடு கண்ட இவர் கி, பி. 2000 என்ற நூலில் புதிய உலகைப் படைத்தார்.

அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு என்று கடித இலக்கிய வளர்ச்சிக்கு வழி வகுத்து தன் தத்துவங்களுக்கு வடிகாலும் அமைத்தார்.

எழுத்துத் துறையில் மு. வ. விட்டுச் சென்றவை எவையுமில்லையெனலாம். சகல துறைகளிலும் பரிசோதனைக் களம் அமைத்துக் கொடுத்துள்ளார்.

பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசானுக இவர் பணி புரிந்த காலம் அன்னுருக்கும் பொற்காலம். அக் காலத்தில் அங்கு தமிழ் கற்றவர்களும் வாழ்க்கையிற் பெரும்பயன் கண்டார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவனுக டாகடர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் மறைவை அடுத்து டாக்டர் மு. வ. நியமிக்கப்பெற்ருர். தமிழ்த்துறையில் பல குறிப்பிடக்கூடிய மாற்றங்களை ஏற்படுத்திச் சென்ருர்.

மதுரைப் பல்கலைக் கழக துணை வேந்தராக டாக்டர் ஆ. சிதம்பரநாதச் செட்டியார் மறைவை அடுத்து மு, வ. நியமிக்கப்பட்டார், இங்கும் பல குறிப்பிடக் கூடிய மாற்றங்களை ஏற்படுத்திஞர். அதில் குறிப்பிடக்கூடியது கடித மூலப் போதனை. இதனுற் பயனடைந்த பட்டதாரிகளானவர்கள் பலர்.

மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன் அவர்களை இன்று நாம் இழந்திருக்கலாம். ஆனுல் தமிழ் இலக்கிய உலகில் மு. வ. என்றும் இளமையுடன் திகழ்வார்.

---

## திருத்துறையூரில் ஸ்ரீ அருணந்திதேவர் குருபூசை விழா

[நமது சிறப்பு நிருபர் ஸ்ரீ மா. பாலசுப்பிரமணியன், சிதம்பரம்]

"அறிவு நெறியை" சிறப்பாக சாத்திரங்களின் வழியாக விளக்கியவர்கள் ஸ்ரீ மெய்கண்ட தேவர் முதலிய சந்தானசாரியர் நால்வருள் ஒருவரும், ஸ்ரீ மெய்கண்ட தேவர் அருளிய "சிவஞான போதம்" நூலுக்கு விரிவுரை நூலாக "சிவஞானசித்தியார்" என்ற நூலையும் "இருபா இருபஃது" என்ற நூலையும் அருளியவருமான ஸ்ரீ அருணந்தி தேவர் குருபூசைவிழாவிற்கு, திருத்தருமையாதீனம் 26வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் புரட்டாதித் திங்கள் 26-ம் நாள் பூர நட்சத்திரம் கூடிய தினத்தன்று திருத்துறையூர் எழுந்தருளி ஸ்ரீ அருணந்தி தேவர் குருமூர்த்தி ஆலயத்தில் ஸ்ரீ அருணந்தி தேவருக்கு சிறப்பாக அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடத்தி குருமூர்த்தி வழிபாடுகள் செய்துள்ளார்கள்.

ஆதீனத் தமிழ்ப்புலவரான டாக்டர் செ. சிங்காரவேலர் எம். ஏ. பிஎச். டி. அவர்கள் "சிவஞானசித்தியார்" என்ற தலைப்பிலும், ஆதீனக் கல்லூரி பேராசிரியர் திரு இரா. செல்வக்கணபதி அவர்கள் "அருணந்திதேவர் அருள் வரலாறு" என்ற தலைப்பிலும், திருவதிகை முதுபெரும்புலவர் திரு இரா. சண்முகசுந்தரம் செட்டியார் அவர்கள் "இருபா இருபஃது" என்ற தலைப்பிலும் விரிவுரைகள் செய்தனர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம அவர்கள் ஆதீனத்தில் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் எழுந்தருளிய சமயாசாரியர், சந்தானசாரியர்களுக்கும் பூர நட்சத்திரத்தன்று விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடத்திவைத்து குருமூர்த்தி வழிபாடுகள் செய்து அனைவருக்கும் அருள் பிரசாதம் வழங்கிஞர்கள்.

ஆதீனக் கல்லூரி முதல்வரும், ஆதீனத் தமிழ்ப்புலவருமான வித்துவான் திரு வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள், தமிழாசிரியர் திரு. கண்ணப்பர் அவர்கள் முறையே "சிவஞான சித்தியார்" "இருபா இருபஃது" என்ற தலைப்பில் விரிவுரைகள் நிகழ்த்திஞர்கள்.

திருத்தருமை ஆதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் புரட்டாசி 25ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை திருக்கடவூர் ஸ்ரீஅபிராமி ஆலயத்தில் (ஆதீனதகின் கோயில்) சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளான உயர்திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் முன்னிலையில் தருமையாதின இசைப் புலவரான சீர்காழி எஸ். கோவிந்தராஜன் அவர்கள் பாடியுள்ள 'அபிராமி அந்தாதி' பாடல் இசைத் தட்டுகளை வெளியீடு செய்தார்கள்.

திரு ஏ. வி. மெய்யப்பன் அவர்கள் எல்லோருக்கும் விழாவின் தொடக்கத்திம் சிறப்பாக வரவேற்புகள் அளித்து வரவேற்ருர்.

---

## தீ மிதிப்புவைபவம்

யாழ். இந்துக்கல்லூரி மைதான வைரவர் ஆலயத்தில் இன்று (வெள்ளிக்கிழமை 18-10-74) காலை 6-30 மணியளவில், யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவரும், சமூக சேவையாளரும், நான்கு தடவை சைக்கிளிலும், இரு தடவை கால் நடையாகவும் கதிர்காமம் சென்றவருமாகிய சின்னத்தம்பி சிவகுருநாதன் (சினிசிங் பயில்வான்) இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ. சபாலிங்கம் அவர்கள் தலைமையில் இவ் வைபவம் நிகழவிருக்கின்றது. வேறு இருவரும் இவ் வைபவத்தில் பங்குகொள்வர்.

---

## புல் வளம் இலவச விநியோகம்

யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள பண்ணையாளருக்கும் வீட்டுத் தோட்டக்காரருக்கும் பசு வளர்ப்பவர்களுக்கும் ஓர் அரிய வரப்பிரசாதம். மில்க் வைற் தொழிற்சாலை அதிபர் திரு. க. கனகராசா அவர்களிடம் வேண்டிய இனங்களில் புல் நறுக்குகள் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

---

## வெள்ளி விழாக்கண்ட சொக்கனுக்கு ……

1 ஆம் பக்கத்து வளர்ச்சி

இரசிகமணி கனக. செந்திநாதன் கவிமணி வி. கந்தவனம், கலையரசு க. சொர்ணலிங்கம் ஆகியோர் தலைமை தாங்குவார்கள்,

நல்லை, ஞானசம்பந்தர் ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாசாரிய சுவாமிகள் பொன்னுடை போர்த்துக் கௌரவித்து ஆசியுரை வழங்குவார்கள்.

திருவாளர்கள் ம, ஸ்ரீ காந்தா ஆ. சிவநேசச்செல்வன், சு. இராசநாயகன், காரை. செ. சுந்தரம் பிள்ளை, நா. சுப்பிரமணியஐயர், ஏ. ரி, பொன்னுத்துரை, வே, ஐயாத்துரை: வி. பரந்தாமன், செ. கதிரேசர்பிள்ளை, சொக்கன், சு, பரநிருபசிங்கம், ந. சபாரத்தினம், இ, சபாலிங்கம், க, சிவராமலிங்கம், குறமகள், எஸ், புண்ணியலிங்கம். கா, இரகுநாதன், ச. சதாசிவம், தி கமலநாதன், க. சச்சிதானந்தன், க, உமாமகேஸ்வரன், இ. மகாதேவா ஆகியோர் இந் நிகழ்ச்சிகளில் உரை நிகழ்த்துவார்கள்.

"சிட்டுக் குருவியும் பருந்தும்" என்னும் சமூக நாடகமும் நடைபெறும் இந் நாடகத்தில் நரம்பியல் மருத்துவ நிபுணர் டாக்டர் நா, சுப்பிரமணியம் அவர்களும் பாத்திரமேற்கின்ருர்கள், மேலும் பல கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

---

## தமிழ்ப் பண்பாட்டு

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

தமிழகத்தின் பல இடங்களுக்கும் சென்று. நமது பழமையையும், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள புதிய வளர்ச்சிகளையும் நேரில் காண்பார்கள். தமிழோடு தொடர்பே இல்லாமல் (வெளிநாடுகளில்) வாழும் இளையவர்களுக்கு, இத்தகைய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் ஒரு புதிய தமிழ் ஓர்மை ஏற்படுமென்று பண்பாட்டு இயக்கம் நம்புகிறது, மேல் நாடுகள் சிலவற்றில் இத்தகைய "மறுசந்திப்பு விழாக்கள்" நடக்கின்றன; அவைகளால் நல்ல பயன் ஏற்பட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது.

இந்தத் திட்டத்துக்குத் தமிழகத்தில் உள்ள பெருந்தனக்காரர்கள், தொழில் அதிபர்கள், மடாதிபதிகள் தமிழக அரசு, அறிஞர்கள் மற்றும் பொது நிறுவனங்களின் ஒத்துழைப்பைப்பெறும் முயற்சிகளில் இயக்கம் ஈடுபட்டுள்ளது: இந்த விழாவை எந்தெந்த வகையில திட்டமிட்டு அமைத்தால் நாம் விரும்பும் பயன் எற்படும் என்பதையும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் சாலை இளந்திரையன் (3362/1, கிறிஸ்டியன் காலனி, புதுடில்லி 5, இந்தியா) அவர்களுக்குத் தெரிவித்து உதவும்படி வெளிநாடுகளில் வாழும் தமிழ்ப் பெருமக்களை விரும்பிக்கேட்டுக்கொள்ளுகிறோம்.

---


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இலகுப்பிள்ளை மயில்வாகனம், சங்கானை கிழக்கு
சங்கானை —வழக்காளி

வழ. இல. M B 13286 எதிராக

மணியன் வேலாயுதம் சண்டிருப்பாய் வடக்கு,
சண்டிருப்பாய் — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 13286-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974-ம் ஆண்டு கார்த்திகை மீ 15-ம திகதி (15-11-74) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-

முதல் வட்டி ரூபாய் 1415/-ம், 9 - 8 - 72 தொடக்கம் 19-4-73 வரைக்கும் ரூபாய் 1000க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச செலவு ரூபாய் 388-71 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சண்டிருப்பாய் கோவிற்பற்று சண்டிருப்பாய் இறை வற்பந்தனை நிலப்பரப்பு (10) பத்து பயிர்வகைகளும் இதன்தாய் உறுதியின்படி எல்லைகள் கிழக்கு:- சின்னத்தம்பி பெண் சின்னப்பிள்ளைக்கும் மறுபேருக்கும உரிய ஆதனம், வடக்கு:- கணபதி மாரிமுத்துவின் ஆதனம், மேற்கு:- சிற்றம்பலம் சுப்பர் பிள்ளைகளும், வேலுப்பிள்ளை பெண் பொன்னுவின் உரிமைக்காரரின் ஆதனங்கள், தெற்கு:- கதிரன் தம்பிமுத்துவின் ஆதனம்.

தோல்புரம்
30-9-74.
215-74

சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்.
மதிப்பாளரும்.


நாட்டுக்கு இலட்சுமி பனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த ஞூ ஐப்பசி மீ க-உ வெள்ளிக்கிழமை [ 1974

## ஆற்றல் அமைப்போம் ஆக்க வேலைக்கு

கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண் பார்வைக் கடாட்சம் யாருக்குக் கைகூடும்? 'அன்பர் என்பவர்க்கே' என்று அபிராமி அடிகள் கூறியுள்ளார். அவ்வாறு கருணை அடைந்தவர்களுககு அந்த நயன பார்வை ,யம் —

தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனந் தரும் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந் தரும் நல்லன எல்லாம்தரும்'

என்று பொருத்தமாகப் புத்தி புகட்டுகின்றார் தேவீ திருத்தாளையே சிந்தை செய்து வாழ்ந்த அபிராமிப்பட்டர்.

இந்தக் காலத்திலே கலி நீங்கி மனித குலம் புனிதமடைய வேண்டுமேயானால் அனைவரும் அன்னையை அநுதினமும அகத்தில் நினைந்து அவள். இன்னருளைப் பெற முயற்சிசெய்வதே சிறந்தவழி. **அன்பர் என்பவர்க்கே அருள் அமையும்'** ஆதலால் அன்பர் என்ற இலக்கணத்துக் கருகராக வருதல் முதலாவது முயற்சியாகும். அடுத்தபடியாக அம்பாளின் அம்பகத்தின் அன்புப் பார்வை அமையும். அமைந்துவிட்டாலோ **நல்லன எல்லாம் வரும்.**

வழியைக் காட்டி வந்திருக்கின்றனர் வாழையடி வாழையாக வந்த மகான்கள். மத போதகர்கள். ஆனல நாமோ அந் நெறியைக் கைப் பற்ருது புன்னெறியதனிற் செல்லும் போக்குள்ளவர்களாகிவிட்டோம. விடவே வாழ்க்கை விடம கலந்த வினையாய் விட்டது. ஆகவே இப்பொழுதாவது எங்கள் ஆற்ருமையை எண்ணி அன்னை தயையை அடைய நவராத்திரி வேளையில் நாம் நெறிப்படுவோமாக.

ஆற்றல் தரும் அன்னை கருணையே வடிவான கன்னி. அகிலமும் காக்கும் தாய். போற்றுவம் அந்தப் புனிதவதியை. போற்றி ஆற்றல் பெறுவோம். பெற்று ஆக்கப் பணிக்கு அவ்வாற்றலைப பயன்படுத்துவோம்.

"தவளே இவள் எங்கள் சங்கா னர்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்(கு) அன்னையும் ஆயினள் ஆகையினல்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலே இறைவியுமாம்
துவளேன் இனிஒரு தெய்வம்உண் டாகமெய்த் தொண்டு
செய்தே".

## உள்ளத்தினுள்ளே இருப்பள்

சிவபெருமான் ஆன்மாக்கள் மீது கொண்டுள்ள கருணையே உமாதேவியாவர். வெம்மையும் தீயும், ஒளியும் மணியும் மணமும் மலரும் பிரிப்பின்றி யிருப்பதுபோல் சத்தியும் சிவனும் பிரிவின்றி யிருப்பர். இந்துக்கள் உமதேவியாரை நவராத்திரி காலத்தில் பக்தி சிரத்தையுடன விரதமனுட்டித்து வழிபட்டு வேண்டிய சித்திகளைப்பெறுவர். நவராத்திரி முதல் மூன்று நாட்களில் உமாதேவியாரை துர்க்கையாகவும் நடு மூன்று நாட்களில் இலக்குமியாகவும் கடைசி மூன்று நாட்களில் மக்கள் சரசுவதியாகவும் வழிபடுவர். துர்க்கையை வழிபட்டு வீரம் துணிவு வெற்றி முதலியவற்றைப்பெறுவர். இலக்குமியை வழிபட்டு செல்வம் அழகு முதலியவற்றைப் பெறுவர். சரசுவதியை வழிபட்டு கல்வி வைராக்கியம் முதலியவற்றைப் பெறுவர்

இக்காலம் மக்கள் பொருளாதாரக் குறைவால்வருந்துகின்ற காலம், வழிபாட்டுக்குத் தேவையான பொருட்களை மக்கள் பெற இயலாது. இயன்றவரை கிடைக்கக்கூடிய பொருட்களைப் பெற்று வழிபாட்டை நடாத்துதல் வேண்டும். பக்தியே பிரதானம். மக்கள் தேவியைப் பொருத்தமான தோத்திரங்களை ஓதி பக்தியுடன் வழிபட்டு அம்மையின் திருவருளைப் பெறுவார்களாக. 'அழுதால் உன்னைப் பெறலாமே, என்ருர் ஒரு நாயனர். நமது நாட்டிலுள்ள இன்னல்களை நீக்க அம்மையின் திருவருள் அவசியம் வேண்டும். நமது மக்கள் புரிய வேண்டிய தவம் இதுவே.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தி னுள்ளே
இருப்ப ளிங்குவாரா திடர்.

— — —

## பல்கலைக் கழக பாடத் திட்டம்

ஏறக்குறைய அரை நூற்ருண்டு காலமாக சொலலளவிலிருந்து பொருளான சம்பவம் இவ் மகத்தான ஆனந்த வருஷம் புரட்டாதித் திங்கள் இருபதில் (6—10-74) நடந்தேறியது. இதுவே மகான் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் கனவாகிய யாழ். பல்கலைக் கழக வளாகம். யாழ்ப்பாணம் பெரும் பெருமைகளைத் தன்னகத்தே அடக்கிய நாடு. இப் பெருமைகளில் ஒன்று இலங்கையின் முதல் கல்லூரி (கொலீஜ்) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டையில் அமையப்பெற்று மாணவர்களை உயர்கல்வியில் தேர்ச்சியடையச் செய்தது. பெருமை வாய்ந்த யாழ் நகரில் உருவாகிய பல்கலைக் கழகம் மேன்மைவாய்ந்த பாடங்களைக் கற்பித்து பொதுவாக உலகத்திற்கும் விசேஷமாகத் தன் நாட்டிற்கும் உதவத் தகுந்த இளஞ் சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

அறிவிலும் அகிலும் கல்வித் திட்டத் துறையில் அறிவு மட்டான ஒருவன் இவ் விஷயத்தில் ஈடுபடுவது ஆங்கிலத்தில் ஓர் பழமொழி (Where Angels fear to trout fool walhs) "அறிவாளி நடமாடத் தயங்கும் துறையில் அசடு நடமாடுவதுபோல" இப் பழமொழிக்கு நான் உரித்தல்லன் என்னும் நம்பிக்கையுடன் எழுதுவது என்து வேதாந்த தததுவத்திலுள்ள ஆர்வமே. வேதாந்த சித்தாந்த மாணவன் என்ற முறையிலும், யாழ் வேதாந்த மடத்தின் அங்கத்தவன் என்னும் அதிகாரத்திலும், இக் கல்விகளால் ஈடேற்றத்தை அடைந்திருக்கும் அனுட்டானத்தாலும் எனது அறிவை அறியப்படுத்துவது நம் நாட்டின் நன்மைக்கே!

பொதுவாகப் பல்கலைக் கழகங்களில் வேதாந்த சித்தாந்த தத்துவங்களை பாடங்களாகப் பல்கலைப் பாடத் திட்டத்தில் சேர்த்தல் மிகவும் அவசியம் தத்துவப் பாடங்கள் பல் வகையிலும் பயனளிக்கக் கூடியவை இவை தற்போது மூற்காலத்திலிருந்த திண்ணைக் கல்வியிலும் பார்க்கச் சிறிது விசேஷமாக ஆச்சிரம கல்வியாக விளங்கி வருவது பலருமறிந்த விஷயம். இத்தகைய கல்வி விரிவற்றதாய் ஓர் எல்லைகோலப்பட்டதாக இருக்கிறதல்லவா? இவ்வெல்லைக் குட்பட்ட கல்வியால் எத்தனையோ மக்கள் ஈடேறியிருப்பதை நாம் செவ்வனே அறிவோம், அப்படியான ஓர் கல்வியை, கலையை, பஞ்சமா கலைகளுள்ளுஞ் சீரிய கலையை நாம் வளர்த்து ஈடேற்றுவதற்கு தகுந்த ஸ்தானம் பல்கலைக் கழகமன்றோ?

உலகில் பல்கலைக் கழகக் கல்வியை அனேக காலங்களுக்கு முன் தோற்றுவித்த நாடுகளில் பல்கலைக் கழகங்களில் தத்துவ சாத்திரங்கள் பாடங்களாகக் கற்பித்தலை நாம் அறிவோம் இதன் காரணமாக பல தத்துவ ஞானிகள் அவ் வூர்களில தோன்றி பல நன்மைகளை மனித குலத்திற்கு அளிக்கிருர்கள். இத் தத்துவங்களை ஒவ்வொரு மனிதனுமே கற்கொள்ளல் வேண்டும. தற்காலத்தில் உலகம் முழுவதுமே பரவியிருக்கும் விசனத்துக்கு பரிகாரம் தத்துவ ஞானமே கொடுக்கும் இதற்கு ஆட்சேபம் இல்லை.

தெய்வீகத் தன்மையுடன் கூடிய கருமம், தெய்வீகத் தன்மையற்ற கருமத்திலும் பன் மடங்கு விரிவுள்ளது என்னுங் கூற்றை மறுப்பார் உலகில் இல்லை.

வேதாந்த சித்தாந்த பாடங்கள் கற்பிக்கும் ஆச்சிரமங்கள், மடங்கள், ஆலயங்கள் ஆங்காங்கே இலங்கையில் பல இடங்களிலும் உண்டு யாழ்ப்பாணத்திலும் பல இருந்து வருகின்றன. இளஞ் சமுதாயத்திற்கு ஏற்ற முறையில் கற்பிக்கும் ஸ்தலங்களல்ல, இவைகள் அதுவுமல்லாது ஓர் பொதுமுறையில் எல்லா ஸ்தலங்களும் நடப்பனவும் அல்ல.

ஓர் ஒழுங்குமுறையில் படித்துச்சமுதாயத்திற்கு பரந்த முறையிலும் தத்துவ ஞானம் பயனளிப்பதற்கு ஒரே ஒரு வழி வேதாந்த சித்தாந்த பாடங்கள் பல்கலைக் கழக பாடங்களுடன் சேர்த்தலே. இதில் சைவ மரபு போதிய ஊக்கம் எடுப்பதாகுக.

இப் பாடங்களை யாழ்ப்பாண வளாகத்தின் பாடங்களில் சேர்ப்பதால் ஞானதத்துவங்கள் பல்கலைக் கழகப் பாடத் திட்டங்களில் அவசியம் சேர்தல் வேண்டுமென்னும் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் சீரிய விருப்பத்தையும் நிறைவேற்றி அன்னருக்குத் தக்க அஞ்சலியாகவும் இது விளங்குமன்ரோ?

டாக்டர் என். கனகரத்தினம்
91, அரசடி ரோட்,
யாழ்ப்பாணம்.
10-10-74

## பனை

ஒல்லாந்தர் காலத்தில் ஒவ்வொரு பனைக்கும் ஒரு காசு வரி விதித்தனர். அத்துடன் அவர்கள் பலோத்காரமாகப் பனைகளைத் தறிப்பித்துத் தாம் அரசாண்ட பிற நாடுகளுக்குக் கட்டிடம் அமைப்பதற்காக ஏற்றுமதி செய்தனர். இக் கற்பக தரு சுண்ணக் கற்பாறை, கல்லி, மணல் உவர் நிலங்களில் நன்கு வளரக்கூடியது. நீர்த்தேக்கம், கடும் வரட்சி, புயல் காற்று, தீச்சேதம், கால்நடை அழிவு ஆகியவற்றைச் சிறப்பாக சமாளிக்கவல்லது. பசளை இடல், களைகட்டல், பூச்சி பூஞ்சண நாசினி தெளித்தல், உரம இடல் ஆகிய பராமரிப்புகளும் தேவையற்றவை. பனை அடர்த்தியாகவோ, அன்றி ஐதாகவோ வளர்ந்தபோதிலும் வழமைபோல் சகல பயன்களையும் வேறுபாடின்றித்தரும். மனிதன் பசி, தாகம் தீர்த்து. உண்டு உறங்கத் தங்குமிடமும், கால் நடைக்குத் தீனும், சாகுபடி நிலத்திற்குச் சேதன உறுப்புப் பசளையும் கொடுத்து கைத்தொழிலுக்கும் உதவும் இப்பனையை தரிசு நிலமெல்லாம் நாட்டவேண்டும்.

அண்மையில் கள் பதநீர் ஆகியவற்றைப் புட்டிகளில் அடைப்பதிலும், சாராயம் வடிப்பதிலும், பனங்கட்டி தயாரிப்பதிலும், பழரசம் பனங்கள் ஆகியவற்றைப் புட்டிகளில் அடைப்பதிலும், கங்குமட்டை தும்பிலிருந்து மை பூசும் பிரஸ் தயாரிப்பதிலும், பனம்பொருள் ஏற்மதி செய்வதிலும் சில முற்போக்கான யாழ் மாவட்ட வாசிகள் அக்கறைகாட்டி வருகின்றனர். ஆகையால் பனையை நேர் வரிசைகளில் நாலுசில்லு டிராக்டர் செல்வதற்கான இடைவெளியிட்டு நிரைகளில் 5 அடிக்கப்பால் ஒரு விதை விகிதம் தரிசு நிலங்களில் நடுவதுநல்லது.

ஆதாரம்: நாட்டிற்கு நயம் தருவன.

அனுப்பியோர்: மில்க்வைற்

## இலவசம்

விஜயதசமியை முன்னிட்டு வித்தியாரம்பம் செய்யும் பாடசாலைகள், சிறுவர் கல்வி நிலையங்கள் தகுந்த அத்தாட்சிப்பத்திரம் கொடுத்து சரஸ்வதிபடம், தேவி தோத்திரப்பாடல் புத்தகம். பனை ஓலை ஏடுகள் ஆகியவற்றை யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் தொழிலகத்தாரிடம் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சி யந்திரசாலையில், 18—10—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பிரதம அதிபர்: திரு. நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர்: திரு. மூ. மயில்வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org